409

உ

நீதித்தொகுதி.

புண்டரீக மூன்றும் இதழின்

இரண்டாம் பாகம்

முதற்பதிப்பு.

OFFICE OF THE R...
No. 170...
MAD...

அசலாம்பிகையம்மாள்
திருப்பாதிரிப்புலியூர்

ஸ்ரீ-ஷண்முகா பிரிண்டிங் ஒர்க்ஸ்
திருப்பாதிரிப்புலியூர்.

1928.

All Rights Reserved.

Price As. 4] [விலை அணா 4.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
17 OCT 1928
MADRAS

முகவுரை.

தாய்மொழிப் பற்றுடைய அறிஞர்காள்!

புண்டரீகம் மூன்றும் இதழாகிய நீதித் தொகுதி சுருங்கியதாக உளதெனப் பலபாடசாலை யாசிரியர்களும் கல்வியிலாகாத்தலைவர்களும் கருதியபடியால் அதன் இரண்டாம் பாகமாக 9 கட்டுரைகளை வரைந்து கூட்டி இதனை வெளியிட்டுள்ளேன். அன்புகூர்ந்து ஏற்குமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்

அசலாம்பிகையம்மாள்.

பொருளடக்கம்

அடக்கம்

பொறுமை

பிறர் பொருள் விழையாமை

உணவும் நித்தியவொழுக்க நியதியும்

பிறர் மறை

ஏதிலாரில்

புறங்கூறல்

மறதி

இச்சை

மறதி—பக்கம்,	வரி	}	பிழை,	திருத்தம்
4,	3	}	சூரிய,	சந்திர

தமிழ்நாடு ஆவணக் காப்பக

183874

அடக்கம்.

இக்குணமே எவர்க்கும் தேடரிய பெருஞ் செல்வமாகும். எல்லார்க்கும் அடக்கம் சிறப்பளிக்குமாயினும் அவருள்ளும் கல்விப்பெருக்குடையோர் குடிப்பெருமையுடையோர் செல்வப்பெருக்குடையோர் ஆகிய இம் மூவகையினர்க்கு மிக மிக இன்றியமையாததாம்.

ஒருவன் தன்னிடமுள்ள பொருளைக் காப்பாற்றத் தவறினும் அடக்கமென்னும் பெரிய செல்வத்தைக் காக்கக்கடவன் எனும் கருத்தினை ஆசிரியர்

"காக்க பொருளா வடக்கத்தை யாக்கம் அதனினூஉங் கில்லை யுயிர்க்கு" எனப்பணித்து உணர்த்தியருளினர்.

வறியவர் அடக்கத்தினை மேற்கொள்ளாவிடில் வாழ்வு நடத்தலே யரிதாகும். ஆதலின் உண்மையில் அடக்கம் உடையராயிருப்பினும் அது காணும்பிறர்க்குப் பெருமையாகத்தோன்றாது சுய நலம்பற்றிப் பிறர் தயவை நாடும் நிலையினில் இருப்பதால் அடங்கி நடப்பதாக எண்ணப்படும்

ஆகலின் மேலே கண்ட மூவகைச் செல்வமுடையவர்கள் அடக்கமாக நடப்பார்களானல் அவ் வடக்கமே பிறர் போற்றத்தக்கதாகும் என்பதனை "எல்லார்க்கு நன்றும் பணிதல் அவருள்ளுஞ் செல்வர்க்கே செல்வந் தகைத்து" என்னும் குறட்பாவினல் விளங்க வைத்தனர். இவ்வடக்கம் அகவடக்கம் புற வடக்கம் என இரு பிரிவு படும். அக வடக்கமாவது மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐந்தனையும் மனம் போனபடி விடாமல் அடக்கி நன்மையாற்றில்

செலுத்தி பாவச்செயல் கடிந்து எவ்வுயிர்க்கும் அன்புபூண்டு இன்பத்தில் திளைப்பதாகும்.

புறவடக்கமாவது அணி ஆடை உண்டி போகம் இது போன்றவைகளில் ஆடம்பரமானவைகளை யகற்றி இன்றி யமையாத அளவிற்கு ஏற்று எவரும் போற்ற நடந்து தன்னை யிலக்கியமாகப் பிறவாலிபரும் பின் பற்றுமாறு எளிய வாழ்வினைமேற் கொள்ளுதலாம்

தனது மேன்மை நலம் இவைகளைக்காத்துக்கொள்ளும் பொருட்டாக ஆமைபோல் ஐந்தடக்கவேண்டுமெனவும் அவ் வாறிந்து நடப்பவனின் உயர்ச்சி மலையைவிடப் பெரிதென் றூர் தெய்வப்புலவர்.

இதனுள் அடக்கியாளவேண்டிய எவற்றினும் முக்கிய மானது நாவென்றறிதல் வேண்டும். இதன் அவசியத்தினை வளையாபதி

ஆக்கப்படுக்கு மருந்தளைவாய்ப்
பெய்விக்கும்
போக்கப்படுக்கும் புலைநரகத்
துய்ப்பிக்கும்
காக்கப் படுவளவுமிந்திரியமைந்தினும்
நாக்கல்ல தில்லைநனி வெல்லுமாறே

எனக்கூறியதனுலு முணரலாம். இதனை

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு"

என்று வேறிடத்திற் குறித்திருப்பதும் வலியுறு த்தும்

இயற்கையாக எழும் ஐம்புலன்களின் கிளர்ச்சியை அதனதனுக்குரிய குற்றமற்ற நெறியில் செலுத்தும் திறமையே உண்மையான திறமையாகும். இத்திறமையிற்றேர்ச்சிபெறாமல் கல்விக்கூடங்களில் நெட்டுருச்செய்து மனதிற்பதித்ததை வெளியிட்டு இயற்கை யாராய்ச்சிவன்மையை இழந்து வெற்றிபெற்றுப்பட்டதாரிகளாக வெளிவருவதால் திறமையுடையவராகமாட்டார். கள்ளம்கடிந்து தூயமனத்தினேடு தத்தம் வாழ்க்கைக்கு அடிக்கோலுதல் வேண்டும்.

நமது பெற்றேர் பெரியோர் ஒழுக்கத்தினைக் குறைகூறி புதுவழிகாணல் பொய்மை நடிப்பன்றித் தம்மைத் தாமே வஞ்சித்துக்கொள்வதுமாகும்

இராமாயணத்தில் கோசலநாட்டின் சிறப்பினைக் கூறுமிடத்து கவிச்சக்கிரவர்த்தி

ஆசலம் புரியைம் பொறி வாளியும்
காசலம்பு நகிலவர் கண்ணெனும்
பூசலம்பும் நெறியின் புறஞ்செலாக்
கோசலம் எனக்கூறினர்

அதாவது இச்சைக்கதிதேவதையாகிய மன்மதனுடைய பஞ்சபுஷ்பபாணங்களும்,

பெண்களுடைய கூரிய கண்களாகிய அம்புகளும்,

நெறியின் புறஞ்செலாக்கோசலம் சன்மார்க்கத்திலேயே தொழிற்படும். ஒழுங்குதவறி ஒருபோதும் செல்லமாட்டா எனச்சிறப்பித்தனர். இதனல் நாம் உணரக்கூடியதியாது? உத்தமமான ஒருபெரியார் அல்லது நல்லார் அல்லது வீரர் பின்னுல் தோன்றக்கூடுமாயினும் அத்தகையார்

தோன்றுவதற்கு அந்நாடே நன்னெறியில் நிற்கவேண்டி யது இன்றியமையாத தாகுமென்பதே. இதனை தொல்லுல கில் நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட் டெல்லார்க் கும் பெய்யுமழை. எனும் முதுமொழியும் வலியுறுத்தும்

அக்ஞாதவாசம் அதாவது கரந்துறைதலைச்செய்த பாண்டவர்களை அறிதற்கு உபாயம் அந்நல்லோர் வசிக்கும் நகரமும் நாடும் குறைவற்று நிறைவுற்ற செல்வமும் சிறப் பும் இன்பமும் ஒழுக்கமும் வாய்ந்து விளங்குமென வீட்டு மர் ஆதியோர் குறித்தனரென்பதும் அவ்வடையாளங்களு டையது மச்சதேசமேயென ஒற்றர்கூற வுணர்ந்தார்களென் பதும் மகாபாரதத்திற் காணலாம். இதனால் புலனடக்கத் தின் சிறப்பினையும் புறவொழுக்கங்களினாலெய்தும் சிறப் பினையும் ஒவ்வொரு வாலிபருமனதிற்பதித்தல் வேண்டும். அடக்கத்தால் உண்டாகும் உயர்ச்சி கொழுமை பெருமை இவைகளை விடுத்து அவுடதங்களினால் உடல் நலமோம்ப நினைப்பது உருவத்தினை விடுத்து நிழலைப்பிடிக்க எண்ணுவ தற்கே சமானமாகும்

பொறாமை.

இந்தப் பொறாமை யென்று சொல்லப்படும் தீயகுணம் எத்தகைய தென்பதை ஆராய்தல் வேண்டும்.

மாந்தரின் இயற்கையறிவின் செம்மையை மாற்றி செயற்கைவெம்மையை யேற்றி இடைவிடாது ஏங்கச்செய் யும் தன்மை இதற்குண்டு.

பிறனெவனும் கல்வியினாலோ சிறப்பினாலோ தன்னை விட மேன்மைபெற்று வாழ்வதை இத்தீக்குணம் காண இடந்தருவதில்லை. வேறு பல தீயகுணங்கள் அவைகளை யுடையவனையழிக்கும். இப்பொறாமையோ இவனை அழிப்ப தோடு நில்லாமல் இவன் சுற்றத்தினையும் வேர் அறுக்கும் என ஆன்றோர் கூறினர். இதற்கு இராமாயணத்தில்

"கொடுப்பது விலக்கு கொடியோய் நினது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி விடுகின்றாய்"

எனவரும் செய்யுளே உதாரணமாகக் கொள்ளலாம். இப்பொறாமை முற்றியநிலைமையில் கருணையுள்ள ஒருவர் மனமுவந்தளிக்கும் கொடையைத்தடுக்கவும் முனைவதினால் பொறாமையைப்பற்றி அழுக்காறு என்னும் அத்தியாயத்தில் திருவள்ளுவநாயனார் கொடை மறுக்கும் உதாரணத்தினையெடுத்துக்காட்டியுள்ளார். நல்லோரைக்கண்டு நாமும் அவர்போல் மேன்மையடையத்தக்க உபாயம் உத்தம குணங்களைத் துருப்பிடிக்கவிடாமல் விழிப்புடன் பாதுகாத்து செயலில் கொண்டுவந்து நேர்மையாய் ஒழுகப்பயில வேண்டுவதேயென்பதை எவரும் மறக்கலாகாது. மகாபாரதமென்னும் இந்தியநாட்டின் எவற்றினும் பெரிய இதிகாசமே பொறாமையினால் ஏற்படும் பேரழிவிற்கு முதன்மையான சான்றாகும். கண்ணில்லா வேந்தனாகிய திருதராட்டிரனும் அவன் மகன் துரியோதனனும் ஆதிமுதலாகவே பாண்டவரின் சன்மார்க்க நடையிலும் சாதுரிய புத்தியிலும் அடக்கமுள்ள ஒழுக்கத்திலும் மேம்பட்ட உயர்வைக்காணச் சகியாததினால் ஏற்பட்டதன்றோ? மகாபாரதம் என்பது. இதனிலும் வேறுதாரணமும் வேண்டுமோ? ஒவ்வொரு வாலிப

றும் பொறாமை தோன்றுமாயினும் அதனை வளர விடாமல் உடனே கடிதல்வேண்டும்.

பொறாமையுடைய ஒருவன் செயலால் அவனது சுற்றமும் உடுக்க உடையும் உண்ண உணவுமின்றி அல்லற்பட்டு அழுங்குவார் என்பது உண்மையாயின், அக்குணத்தினையுடைய இவன் அடையும் துன்பம் எத்தகையதாயிருத்தல் வேண்டுமென் எனப்படிப்போரே ஊகித்தறிதல் கூடும்.

பொறாமைகொண்ட ஒருவனிடம் முன்னை நல்வினையால் தங்கியிருந்த திருமகள் பின்னர் இருக்க விரும்பாமல் அகலவெண்ணி தானிருந்த இடத்தில் தன் தமக்கையாகிய மூதேவியை நிறுத்தித் தான் விலகுவாள் என்னும் கருத்தினை "அவ்வித்தழுக்காறுடையானைச்செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்" எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் வலியுறுத்தியருளினர். செய்யவளாகிய செல்வத்தின் அதிதேவதை வறுமைத்தெய்வமாகிய மூதேவியைத் தானிருந்த இடத்தில் பிரதிஷ்டை செய்து விலகிவிடுவாள் என்பதே இதன் பொருள். ஆகவே இப்பொறாமைக்குணம் இம்மையில் வறுமையையளித்து தன்னைச் சேர்ந்தோரையும் கெடுத்து தன்வறுமைக்காக மனமிரங்குவோரையும் பெறாது இதனால் மறுமையையுமிழக்கச் செய்து மக்களாய்ப் பிறந்த பெரும் பேற்றினைக்கொள்ளை கொள்வதால் இதனை யொழித்துப் பிறன் சிறப்பைக்காண நேருங்கால் தான் பெற்றது போல் மகிழ்ந்து அவாவறுத்து ஒழுக்கத்தானுயர முயல வேண்டியதே ஒவ்வொருவரின் கடமையாகும். கற்பது எளிது கற்றபடி நிற்கப்பயில்வதே சிறப்பு. பொறாமையை ஒழிக்க வேண்டுவதன் காரணங்களையும், அதை ஒழிப்பதாலெய்தும் பெரும்பயன்களையுமுணர்ந்தும், பிறர் கேட்க எடுத்துரைத்

தும் தன்னளவில் திருந்தமுடியாத பலரைக்காண்கின்றோம். அவர் பொருட்டு இரங்கவே வேண்டும். பிறனைக்கொல்வதாக எண்ணித் தன்னைத்தான் கொலை செய்து கொள்வதற்கே இது சமானமாகும்.

ஆகவே அறிவுடையோரெவரும் பொறுமையின் வயப்பட்டு நமது அழிவை வரவேற்க மாட்டார்களென்பதை நமது அகத்தில் நிலைநிறுத்தல்வேண்டும்.

பிறர்பொருள் விழையாமை.

இக்குணம் மனிதரை ஒப்புயர்வற்ற மேன்மையிற் கொண்டு சேர்ப்பதாகும்.

எத்துணை மனதைக் கவரத்தக்கவைகளாயினும் அவை பிறனுடைய பொருள்கள் எனத்தெரிந்தபொழுது அவற்றின்மீது சென்ற தனது மனதைத்தன் பக்கல் இழுத்து அதனைப்பற்றிய எண்ணத்தை முற்றிலும் மறக்கவேண்டும்

கங்கைவளம் சிறந்த கோசல நாட்டை தந்தையின் கட்டளையினால் கவலாது துறந்து காட்டில் மனைவியுடன் காலங் கழித்த அயோத்தியரசாகிய ஸ்ரீராமபிரான் இராவணவதம் செய்தபின் இலங்கையை அவன் தம்பி விபீஷணனுக்கே உரித்தாக்கி முடிசூட்டித்திரும்புமுன், இலங்கையரண்மனையில் இலங்கேசன் பாதம் கழுவுவதற்காக இடப்பட்டிருந்த ஒப்புயர்வற்ற ஓர் மாணிக்க மணிப்பாறையைக் கண்டு பிரமித்து அதனிடம் கவனம் செலுத்தியதாகவும், உடனே

அக்குறிப்புணர்ந்து அருகில் நின்றிருந்த ஜாம்புவான் எனும் கரடிவேந்தன் பிறர் பொருள்மீது கண்ணோட்டம் செலுத்துவது பின்னர் அதனிலார்வம் உண்டுபண்ணவும் கூடும் என அஞ்சித்தடுப்பதற்குத் துணிந்து ஓர் சுலோகம் கூறியதாக தொன்றுதொட்டு வழங்குகிறது. அவ்வடமொழி சுலோகத்தைத் தமிழ்ச்செய்யுளாக்கி அடியில் வரைந்துள்ளேன் அதாவது

"ஈசனுர் கண்டம் கறுதநாள் இந்திலத்
தெண்கண்ணர் சிரமஞ்சதாய்
எய்துநாள் அரிமேனி பொன்னயிருந்த நாள்
இந்திரன் இருவிழி கொள் நாள்
மாசிலாச்சோமன்களங்கமில்லாத நாள்
வாரியுவரில்லாத நாள்
வளர்மலைகள் குலமெலாம் சிறகொடு முலாயநாள்
வானின் மீனில்லாத நாள்
தேசுடைய மாரனுடலத் தோடிருந்தநாள்
திரையுததி கடையாதநாள்
தெரியுமாயினுமீந்த பொருள்தனை விரும்பினோர்
செப்புதற்கரிதரியதாம்
தேசிகவிபீஷணற் கென்றுநீ முன்பீந்த
செய்யவொளி மாமணியினை
திறையாக நம்பதிக்காமென்றுளத்தினிற்
சிந்தித்தல் முறையன்றரோ

என்று கூறி அவர் மனதை மாற்றினர் என்பது வழக்கு

இதன் பொருள் சிவபெருமான் கடலிற் பிறந்த விஷத்தை தேவர்களை இரட்சிக்கும் பொருட்டு தான் உட்

கொண்டு என்றும் தனது கருணைக் கறிகுறியாக நீல நிற முடைய கண்டத்தராக விளங்குகின்றார் அவ்வாறு விஷ முண்ணாது கண்டம் கருநிறமாகாமல் இருந்த ஆதிகால மும் அறிவேன்

மகாவிஷ்ணு பொன்மேனியராகவே யிருந்ததாகப் புரா ணங்கூறும் பூர்வகாலமும் உணர்வேன்.

இந்திரன் கவுதமர் சாபம்பெறாமல் இரண்டு கண்களு டன் இருந்த காலமும் தெரியும். தக்கன் சாபத்தினால் சந் திரனுக்குக் களங்கமுண்டாயிற்றாதலின், அச்சாபம் பெறா மல் சந்திரன் பூர்ணமாய் மறுவின்றிப் பிரகாசித்ததும் கண் டிருக்கிறேன்.

குறுமுனிகடலைக்குடியாத முன் உப்பில்லாதிருந்த கடல்நீரையும் அறிந்துள்ளேன்

பர்வதங்களெல்லாம் இந்திரனால் சிறகுகள் வெட்டப் படாமல் சஞ்சரித்துக்கொண்டிருந்த காலம் தெரிந்ததே.

ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பிரகாசியாத ஆதிகாலத் தையும் பார்த்திருக்கிறேன்

மன்மதன் சிவாபசாரம் செய்தழியாமல் அழகுக்கடவு ளாயிருந்ததுமறிவேன். கடல்கடையப்படாத காலமும் தெரி யும். ஆயினும் அந்நாள்கள் முதலாக ஒருவர்க்கீந்த பொரு ளில் பிறகு இச்சைவைத்தவர்களை மட்டில் அறிந்தேனில்லை. ஆதலின் மேதாவியாகிய விபீஷணாழ்வாருக்கு தத்தமாக அளித்த இந்த இலங்காராஜ்ஜியத்திலுள்ள எந்தப்பொருளை யும் அரசர்க்குரிய கப்பமாகவும் அபேக்ஷித்தல் குற்றமாகும் என்பதே

தான் ஜெயித்துக்கொடுத்த பொருளிலேயே இச்சை வைப்பது குற்றமென்றால் தனக்கெவ்வித உரிமையுமில்லாத பிறர் பொருளில் ஆசை வைப்பது எவ்வளவு பெருந்தவறு என்பதை இதைப்படிப்போரே சிந்தித்தல் கடனாகும்.

உணவும், நித்தியவொழுக்க நியதியும்

இவ்விடயமே எவற்றிலும் முதலாகக் கவனிக்கப்படல் வேண்டும். உடல் நலம் உணவின் நேர்மையில் அமைந்து கிடக்கின்றது. உடல் நலமிழக்கின் எல்லா உயர் குணங்களும் மங்குவதியல்பே. நல்வாழ்வில் வேட்கையுடைய எவரும் இதில் மிகுந்த கவனம் செலுத்துதல் கடனாம். உடலின் தன்மைக்கேற்ப வாழும் பிரதேசத்தின் சீதோட்டின நிலைமைக்கேற்ப, உணவு கொள்ளுதல் வேண்டும். அதிலும் நாயனார் கூறியபடி "துய்க்க துவரப்பசித்து" என்ற ஒப்பிலாத்தொடரினை இளைஞர்மட்டுமல்ல முதியரும் மறவாது போற்றி அதன்வழி நடப்பின் பற்பல வியாதிகளைத் தடுக்கக் கூடும். நன்றாகப்பசித்தபின்பே புசித்தல் என்னும் உறுதியே பெரும்பாலும் தற்காலத்தில் காண்பதருமையாய் விட்டது. சுவையுணுத்தின்பண்ட பண்டகசாலைகளைக்காண நேருங்கால் சிறுபசியுமில்லாதிருப்பினும் சுவைப்பித்தினால் அவற்றை வாங்கியுண்பதே நாகரிக நடையாக எண்ணவும் படுகிறது. உணவிலும் தன்னியல்பு தான்பிறந்த நாட்டினியல்பு இவற்றை மறந்து குளிர்மிகுந்த பிறநாட்டினரைப்

போல சூடான பானங்களேயும், இரக்கத்தின் பாற்படாத இறைச்சி வகைகளேயும் விரும்புவோரும் பலராவர்.

அந்தோ! இத்தகையார் நிலேமைக்கிரங்காமலென்செய்வது? தற்கால மாணவர்கட்கு ஆரம்பத்திலிருந்தே உடல் நலம்பேணும் அவசியமும், உணவில் ஒழுங்கு ஏற்படவேண்டியதன் காரணமும், தெரிய இடமில்லாமல் போகிறது. பிறருக்கு வயித்தியம் புரிந்து பொருள் தேடுவதென்கிற நோக்கம் கொண்டு வயித்திய பரீக்ஷைக்குப் படிக்கின்றார்களேயன்றி தன் உடலேப்பாதுகாப்பதற்காகவல்ல. அப்படி வயித்தியராகவேண்டிப்படிக்க முற்படும் வயதும் இளமையிலல்ல. மனம் போனபடி நாவடக்கம் கட்டுப்பாடு ஒன்றுமின்றிப் பலவருடங்கற்ற மாணுக்கர்களாகி மேற்சென்றதாக ஓரிடம் கண்டபின்னரே பலர் ஜீவனேபாயத்திற்காக வயித்தியர் பரிட்சைப்பிரிவில் போய்ச் சேருகின்றார்கள். இதன் பயனுகப்பிறகு தன்னே ஒழுங்கு படுத்திக் கொள்ளலாமாயினும் பயிற்சியின் நோக்கம் சிலாகிக்கத்தக்கதாகாது. முன்னுளில் எக்காரணமும் இன்றிப்பிழையற எழுதப்படிக்கத் தெரியும் பொழுதே திண்ணேப்புறப்பள்ளி ஆசிரியர்கள் மனப்பாடம் செய்வித்து வந்தஉடல் நலம் ஊண்முறைகளேப்பற்றிய செய்யுள்களே அடியில் வரைகிறேன்

"பால்உண்போம் எண்ணே பெறின் வெந்நீரிற்
குளிப்போம்,
பகற்றுயிலோம் பகற்புணரோம் பயோதரமுமூத்த
ஏலஞ்சேர்குழலியரோடிளவெயிலும் விரும்போம்
இரண்டடக்கோமொன்றை விடோம் இடதுகையிற்
படுப்போம்

மூலஞ்சேர்கறி நுகரோமூத்த தயிருண்போம்
முன்னாளிற்சமைத்த கறியமுதெனினும் விரும்போம்
ஞாலந்தான் கிடைத்திடினும்பசித்தொழியவுண்ணோம்
நமனார்க்கிங்கேதுகவை நாமிருக்குமிடத்தே எனவும்

"நீர்கருக்கி மோர் பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம் பேர்உரைக்கிற்போமேபிணி" எனவும் வரும் இதுபோன்ற பல எளிய அரியவாகிய நித்தியவொழுக்க நீதி நியமங்களை மிக இளமையிலேயே பயின்றுவந்தனர்

இதன் பொருள் பசுவின் பால் தவறாது பருகுவோம். [நமது உணவில் மிகச்சத்துள்ளதும் சிசுக்களுக்கும் தீமைபயவாததுமாகிய பசுவின் பாலைப்பருகுவது அவசியம் என்பது குறித்து ஆரம்பத்திலேயே அதனைக் குறிப்பிட்டார்.]

எண்ணெயிட்டுக்கொண்டால் வெந்நீரில் ஸ்நானம் செய்வோமென்றிருத்தலினால் சாதாரணகாலங்களில் குளிர்ந்த ஜலமே ஸ்நானத்திற்கு ஏற்றதென்பது குறிப்பாலுணர்தல் வேண்டும்.

பகலில் நித்திரை செய்யமாட்டோம். பகலில் மாதர் போகமும் செய்யோம். தன்வயதிற்கு மூத்த வயதுடைய ஸ்திரீகளையும் சேரமாட்டோம். இளவெயிலில் ஒருபோதும் உட்கார மாட்டோம். மல ஜல உபாதை நேர்ந்தக்கால் அவைகளைக் கட்டுப்படுத்தாது உடனே வெளிப் படுத்துவோம்

இந்திரியத்தினை மன நெகிழ்ச்சியினால் விடாதிருப்போம்

உண்டபிறகு இடதுகையைத் தலையின் கீழ் வைத்தே படுப்போம்.

மூலவியாதியையுண்டுபண்ணத்தகுந்த சூடானபதார்த் தங்களைப் புசியாதிருப்போம். நன்றாகப் புளித்த தயிரை யுண்போம்.

முன்னாளிற் பக்குவம்செய்த பதார்த்தவகைகள் தேவா மிர்தத்திற்கொப்பென உரைத்தாலும் அவற்றை விரும்ப மாட்டோம்

எல்லாவற்றையும் விட "இவ்வுலகத்தையே ஏகபோக மாக ஒருவர் அளிப்பதாய்ச் சொன்னாலும் அப்பெரிய லாபம் கருதி நன்றாகப்பசியாமுன் ஆகாரம் கொள்ளமாட்டோம். இவ்வாறு நடப்பதனால் இயமனுக்கு நம்மிடம் வரவேண்டிய வேலையேயில்லை என்பது பொருள்.

பின்காட்டிய வெண்பாவினடிக்கு தண்ணீரை நன்றாகக் காய்ச்சியும், மோரினை தண்ணீர் அதிகம்விட்டு விளவியும், நெய்யினையுருக்கியும், உண்பவர்களின் பெயரினையுரைத்தா லும் வியாதி நீங்கும் என்பது பொருள். இதுபோலவே தைலாப்பியங்கனத்திற்குரிய நாள்களையும் உரித்தல்லாத நாள்களையும் விளக்கி

"அருக்கன் எண்ணெ யழகழிக்கும்
அனியாம் திங்களாகாது
திருக்கும் செவ்வாயுயிர் போக்கும்
செய்யபுதனற் பொருள் உண்டாம்
கருத்தையழிக்கும் கவின் வியாழம்
கதிரார் வெள்ளிபுகழ் நீக்கும்

பெருக்கமுண்டாம் சனியெண்ணை
பேணல் முழுகவல்லாரே'' எனவும்,

''எண்ணையிடலாகாவிருங்கிழமை தன்னிலே
எண்ணையிடவேண்டி யிருந்தக்கால்—விண்ணினுறும்
ஞாயிறுபூ செவ்வாய் மண் நல்ல வியாழம் மறுகு
நேயவெள்ளி நீ றிடுகநேர்.''

எனவும் அருளியுள்ளார்கள். இதுவுமன்றி விருந்துண்ணுவதற்கும்.

''வெள்ளிசனி திங்கள்புதன் விருந்துண்ண நன்றாகும்
கள்ளவியாழம் கசப்பிக்கும்—எள்ளளவும்
தீராப்பகையாகும் தினகரனிற் செவ்வாயில்
வாராப்பகையேவரும்.''

எனவும் இன்றியமையாமல் புதிதாய் வந்த விருந்தினரை உண்பிக்க வேண்டி நேரில், அதற்குப்பரிகாரமாக

''செய்வாய்க்குப்பாலாம் தினகரற்கு நெய்யாகும்
மெய்யார் வியாழம் வெண்ணீராகும்—ஐயாகேள்
இன்னொரு விருந்தை யிட்டிடவேண்டிட்டக்கால்
சொன்னோம் பரிகாரந்தான்.'' எனவும்,

உணர்த்தியுள்ளார்கள். மயிர்கழிக்க

''தாதைகெடும் வெள்ளிசனிசருவநாசம்
நீதிகெடும் வெய்யோனிதியகற்றும்—ஓதுகுரு
மானங்கெடுக்கு மரணம் செவ்வாய் மெய்யில்
ஆனமயிர் தான்களைந்தக்கால்'' என்றும்,

விதித்துள்ளார்கள் அன்றியும் காலையில் தந்தசுத்தி செய்தற்கும்,

"கல்லுமணலும் கரியுடனே பாளைகளும்
வல்லதொருவைக்கோலும் வைத்து நிதம்—பல்லதனைத்
தேய்த்திடுவாராமாயின் சேராளே சீதேவி
வாய்த்திடுவாள் மூதேவி வந்து" என்றும்

"நாலுமிரண்டும் சொல்லிற்குறுதி, ஆலும் வேலும் பல்லிற்குறுதி" என்பதாகவும் கட்டளையிட்டிருக்கின்றனர்.

இராகுகாலமென தினந்தோறும் எந்த நற்காரியங்களையும் தொடங்கத்தக்கதன்றெனப் பெரியோரால் குறித்து அளவுபடுத்தி ஒதுக்கப்பட்ட நேரத்தினையும்

"அரியிருபத்தாறேகால் அம்புலிமூன்றேமுக்கால்
எரிவண்ணனிருபதோடுமிரண்டரை புதன் மூவைந்து
குருபதினெட்டேமுக்கால் குளிர்வெள்ளி பதினொன்றே
கால்
கரியனேழரை யிராகுகாலமென்றறிந்து கொள்ளே"

என்ற ஒருகவியில் அடக்கி அட்டவணை காட்டிவைத்தனர்.

இராகு காலத்திலே நம்பிக்கையில்லையென குதர்க்கம் பேசவரும் அன்னிய நவநாகரிகப்பேய்வாய்ப்பட்ட சில துரதிர்ஷ்ட சாலிகளைப்பின் பற்றாமல் பண்டைக்கால மூதாதைகளால் விதிக்கப்பட்ட கட்டுதிட்டங்களுக்குள்ளடங்கி மேலேகண்ட தினசரி வாழ்விற்கின்றியமையாத செய்யுள்களை மனப்பாடம் செய்யவேண்டியது ஒவ்வொரு இந்திய வாலிபர்கட்கும் உரியகடமையாகும்.

இதுவுமன்றி ஐந்தாறு வகுப்புகளுக்கு மேல் ஜனன கணிதக் குறிப்புகளை நிர்ணயிக்கும் சோதிட சாஸ்திரக் கலையின் பிரதம பாகமும் குடும்ப வயித்தியமாகக்கொள்ளப்

படும் (நம்தேசத்தில்எளிதில்கிடைக்கக்கூடிய) சில மூலிகை களின் உபயோகங்களேயும் உணர்தல் வேண்டும். அவை களேயுணர்த்தத்தக்க உபாத்தியாயர்களே ஆரம்ப பள்ளிக் கூடங்களில் போதிக்கக்கூடியவர்களாவர்

ஆகவே தற்காலம் உபாத்தியாயர்களாகப் பயிற்சி பெறும் அப்பியாஸ கூடங்களிலேயே நித்திய வொழுக்கப் பயிற்சி விதிகள் என்னும் பெயரால் இவைபோன்ற முக் கிய விஷயங்களேப் பாடமாக அமைத்தல் இன்றியமையாத தாகும்.

பிறந்த நாட்டிற்கு ஒவ்வாத முறையில் நாம் பெறும் கல்வி பெரிதாயினும் அவை நமக்குச் சிறப்பாகமாட்டாது. நமது பண்டைக்கால நியதிகளேக் கற்பிக்கும் கல்வி சிறிய அளவுடையதெனினும் அவையே நமக்குச் சிறப்புடையதா கும் என்பதை நாம் ஒவ்வொருவரும் மனஙகொள்ளல் வேண்டும்.

இக்குறிப்பெல்லாம் இளமையிலேயே பயிலவேண்டிய தன்றி பாடசாலே நீங்கிஜீவனோபாயத்திற்காக உழலும் காலத்தில் தெளியத்தக்கதென எண்ணுதல் பெரிய பிழை யாகும்.

பிறர் மறை.

இளைஞர்களின் எதிர்கால வாழ்வின் மாசற்ற வளர்ச்சியை அழிக்கத் தோன்றும் புன்மைக்களைகளில் இப் பிறர் மறை புணரும் வேட்கையும் சிறந்ததாகும்.

என்னை? பிறர் இருவர் தம்முள் தனிமையில் பேசும் விடயங்களை யாதெனஉணர மனம் முந்திவிரைதல். இவ்வெண்ணம் மிகமிகத்தவறும் கொடியதுமாகும். இளமையிலேயே இதனைக்களையாமல் விடுவரேல் வயது வந்து உலகியலறிவிற் றலையிடுங்காலும் இவ்விழிகுணம் மாந்தரை விட்டகல்வதில்லை. இதற்கு மாணுக்கர் பிறர் மந்தணமாகப் (இரகசியமாகப்) பேசுதற்கு விழையும் குறிப்புத்தோன்றிய வுடனே தான் அவ்விடம் விட்டு நீங்குவதற்குச் சிறிதும் தாமதிக்கக்கூடாது. ஒருக்கால் எதையும் ஒளிவாக வைத்துக்கொள்ளும் எண்ணம் தனக்கில்லாமலிருக்கலாம். அதனுலேயே பிறரும் அவ்வாறே வெளியிடவேண்டுமென்று எதிர்பார்ப்பதும் நீதியாகாது. பெருமை எனும் செல்வத்தையடைய விரும்புவோர் எவர்க்கும் இது பெரும்பகையாகும். இதுபற்றியே இதனை நாலடியாரில்

பிறர்மறையின்கட் செவிடாய் எனத்தயங்காமல் கூறியிருக்கின்றூர். ஐம்புலன்களின் அருமையை எவரும் போற்றவேண்டியதிருக்க இவ்வாசிரியர் நீ செவிப்புலனற்றவனுகுக எனக் கூசாது கூறினுர் என்னை? (பிறர் மறை) இதரர்களின் ஒளிவான செய்திகளைக்கேட்பதில் செவிடாயிருத்தல் சிறந்ததென்பதே தேற்றம்.

இசைத்தமிழ்வாணர் ஒருவரும் இதுபற்றியே ஒலியைக் கேட்பதற்குக்காது இன்றியமையாததே எனினும், தீமை பயக்கத்தக்கவைகளைக்கேட்பதில் சிறிது முற்படக் கூடாதென்பது தோற்றவும், அவ்வாறு செவியின் பயனை நல்லாற்றிற் செல்லவிடாது தீமையிற்புகுத்துவோரை வெறுத்தும இழித்தும்,

"செய்யவர் பழிகேட்கவளைபோல்
வளையுங்காது
சிதகதை கேட்கவென்றால்
காதினிற்றுளை யேது" என எள்ளி இகழ்ந்தனர்.

மனதில் இயல்பாயெழும் எண்ணங்களை மனவமைதியுடன் ஆய்ந்து அவற்றில் நன்மைக்கேதுவாகத் தோற்றும் விருப்பங்களில் விரைந்து செல்லவும், தீமைக்காதாரமான விருப்பங்களில் சிறிதும் மனதை விடாது உறுதியுடன் தடுத்து நிற்கவும் பயில்வதே கல்வியாகும். அவ்வாறின்றி கட்டுக்கட்டாகப் புத்தகங்களை நெட்டுருச் செய்து கலாசாலைகளில் விடையிறுத்துப்பட்டம் பெறுவதும், பிறர் வியக்க நாவன்மையுறப் பேசுவதும், கல்வியும் கல்விப் பயனுமாகாதென்பது திண்ணம். இது குறித்தே

அலகுசால் கற்பின் அறிவு நூல் கல்லா
துலகநூலோதுவதெல்லாம்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டுதடுமாற்றம்
போஒந்துணையறிவாரில் என்று நாலடியாரில் நன்கு விளக்கியுள்ளார். விதிவிலக்குகளையுணர்ந்து சோதனைகட்காளாகாமல் ஒழுகிவரப்பயில்வதே பயிற்சியாகும். அதுவே

கல்வியாகும். தனது மனதை கட்டுப்படுத்தத் துணை செய்ய மாட்டாத கல்விப்பயிற்சி அச்சியந்திரங்களிலும் துணைச் சாதனங்களிலும் பதியப்பெறும் எழுத்துக்களாலும் அவ் வெழுத்துக்களின் கருத்துக்களாலும் அவைகளைத் தாங்கி நிற்கும் தாள்களுக்கு எவ்வாறு எவ்விதபயனும் இல்லையோ அவ்வாறே தீயவிருப்பங்களுக்கிடம்தரும் மாணவர்கட் கும் தாம்பயின்ற புறக்கல்வியினால் ஒருபயனும் கிடையா தென்பது உறுதியாகும்

இத்தகைய நிலைமைக்காளாகாமல் தத்தம் மனதைக் காத்தும் பிறர் மறைபுணரும் விழைவைக் கொன்றும் வெற்றி பெறுவதே இளைஞர் நந்நடைக்குப் பேருன்று கோலாகும்.

எதிலாரில்.

இதனைப்பற்றி எந்நாட்டிலும், எம்மதத்திலும், எக் கொள்கையினரிலும், ஒரேவித உணர்ச்சிதான் என்பதெவரு மறிவர். இஃதொன்றே இதன் பெருமைக்கு அரண் செய் வதாகும்.

பிறர் தாரத்தினைத்தாயென மதித்தல் வேண்டும் என அறிஞர் பலர் கூறியிருக்கின்றாராயினும் நாலடியார் பிற மாதரை நோக்கும் முயற்சியையே தடுத்து எதிலார் இற் கட்குருடனாய் என அழுத்தமாகக் கூறியுள்ளார்.

உலகம் போற்றும் மகாத்மா காந்தியடிகளும், ருஷிய ஞானி டால்ஸ்டாயும் தாங்கள் வகுத்தபிரமசரிய மாணவர் களின் ஆசிரமவிதியில்

"நுண்ணிடைமடவார் எதிர்வரில் நோக்காத்
திண்ணியவறிவும் சிந்தையினுள்ளும்
காமமென்பதனைக் களைந்திட முயலு
நேமமும் நித்தியநியதியாம்" எனக் கட்டளையிட்டதும், மாதரை நோக்குவதே கூடாதென்பதை வலியுறுத்துகிறது. நோக்கிய மனநிலைபைச்சிதறுது காத்தலென்பது மிக மிக வரிதென்பதே பழுத்த உலகியல் அநுபவமுணர்ந்த பெரியோர் சம்மதமாகும். இந்நியமம் விரதமாகக்கொள்ளும் இளைஞர்க்கு பிறபல இடையூறுகளும் பணிந்து ஏவல் கேட்குமென்பதே தேற்றம். அவா எழுதற்கே இடம் ஏற்படாமல் உறுதியுடனிருந்து தடுப்பது சாத்தியமாயின், பின்னர் பிறனில் விழையாமையும் எளிதாகும். அவ்வித விழைவு இறந்துபடுமேல் உலகில் செயற்கரும் செய்கை செய்யும் தீரத்தன்மை இவர் உடைமையேயாகும். இனி இதனிலும் பெறத்தகும் பேறுமுளதோ?

நன்மைகட்கெல்லாம் திறவுகோலாகிய புலனடக்கம் அவாவறுத்தல் இவைகளை இயற்கைப்பயிற்சியாகக்கொண்ட சிலருக்கு உலகில் எய்தக் கூடிய துன்பங்களும் பிற்காலத்தில் சிறிதும் இலையென்பது முக்காலுமுடிந்தவுண்மை.

இதனால் இல்வாழ்வைத் துறப்பதென்று பொருளாகாது. இல்லறமல்லது நல்லறமன்று என எம்பெருமாட்டியார் கூறியது பிழையாகும். இல்லறத்தை இகழ்வோன் உலகையே வஞ்சிப்பவனென்று கொள்ளலும் மிகையாகாது.

இக்கருத்தைக் கம்பராமாயணம் ஆற்றுப்படலம் முதற் செய்யுளில்

"ஆசலம்புரியைம் பொறி வாளியும்
காசலம்பு நகிலவர் கண்ணெனும்
பூசலம்பும் "நெறியின் புறஞ்செலாக்
கோசலம்" என ஒழுக்கத்தின் செம்மையைத்
தெளியக் கூறியிருத்தலே தக்க சான்றாகும்.

நெறிபிறழா நேர்மையாளர்க்கு உள்ளப்பிணியும் உடற்பிணியும் உறுமென்பதும் கண்கூடாம். ஏக பத்தினி விரத சீலனாகிய இராமபிரான் அவதரிப்பதற்கு முன்னமேயே அக்கோசல நாடும் ஒழுக்கத்திற் சிறந்த உத்தமக்குடி வளம் பெற்றிருந்ததென்பதை அக்கவிதையினாற் கம்பர் உணர்த்தியுள்ளார்.

இஃதன்றி தத்தம் புலன்களை நெறியிற் செலுத்தி இன்பம்நுகர ஆற்றலின்றித் திறம்பிய ஆண்மையுற்ற சிலரே தமது குற்றத்தினை மறந்து மகளிரே தம்மைக் கெடுத்ததாக அவர் தமைப்பலவாறு (பின்னர் கூசாது) இகழ்ந்துரை வழங்கியுமுளர். இத்தகையோர் பாவாணரிலும் உளர். முனிவரிலும் உளர். இவர் தகுதியாதாயினும் இவர்கள் கூற்று வெறுத்தொதுக்கத்தக்கதேயாகும். ஆண்மகனால் பெண்மகள் (இலேசாக சுயநலம் கருதி) வஞ்சிக்கப்படுதலே உலகில் பெரும்பாலும் இயல்பென்பது அறிஞர் துணிபு. இவ்விதிக்கு மாறாகச்சில உதாரணங்கள் காணலாமெனினும் இத்தகையார் தோற்றத்தினால் ஆண்மக்களாயினும் இயற்கையினாற் பெண்மைக்குணத்தினர்களே யாவர். பொதுவாய் மக்களினத்தில் சேர்ந்த இருபாலாரும் தத்தம் கடமையையுணர்ந்து கடனாற்றும் பொறுப்புடையரேயாவர். இப்பொறுப்புணரமாட்டாதவர் எவராயினும் அன்னார் மாக்களினத்தில் வைத்தெண்ண வேண்டியவர்களேயாவர். இது பற்றியே

183874

நாலடியாரில்

"பிறர் மறையின்கட் செவிடாய்த்திறனறிந்
தேதிலரா் இற்கட்குருடனாய்த்தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவர்க்கு" என இம்முக்குற்றங் கடிதலின் அவசியத்தினையுணர்த்தி இவற்றைக் கடியக் கற்றோர்க்கு ஏனைய பிற அறங்கள் வேண்டற்பாலதன்றெனவும் கூறி வைத்தார். இத்தகைய அறவோர் நூல்களின் பொருள் நுட்பங்களை நன்கு சிந்தித்து அதன் வழி நடப்பதே நமது தலைக்கடமையாம்.

புறங்கூறல்.

இக்கொடிய புறங்கூறல் என்னும் நோய்க்கிரையாகாமல் விழிப்புடன் தற்காத்துக்கோடலே அருஞ் சிறப்பாகும்.

"அறத்தினூங்காக்கமுமில்லை" என அருளிச்செய்த தெய்வப்புலவரே

"அறனழீஇ யல்லவை செய்தலிற்றீதே
புறனழீஇப் பொய்த்துநகை" என்று அறத்தையிழித்துப்பேசி பாவங்களையே செய்தலினும் தீமையுடையது ஒருவனைக் காணாதவிடத்து அவனை இகழ்ந்து பழிபடக்கூறுதல் என்று கூறியிருப்பதொன்றே புறங்கூறுதல் எத்துணை யிழிகுணமென்பதை விளக்கி வலியுறுத்தும். ஒருவனைக் காணாவிடத்து இகழ்ந்து பேசி கண்டக்கால் நயம்பட

மொழியாடத்துணிவதே இவ்விழிவிற்கிடந்தருவதாகும். உண்மையாகவே ஒருவரிடம் குற்றம் இருப்பினும் அதனை எதிரிலேயே அஞ்சாது இடித்துக்கூறுதல் சிறப்பாகுமன்றி மறைவில் விவரித்தல் அடாததாகும். இதுபற்றியே நாயனாரும்

"கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னேக்காச் சொல்" என்றுறுதியிட்டுள்ளார். சுயநலங்கருதி ஒருவரை எதிரில் நகைமுகம் காட்டிப்பேசவேண்டிய அவசியம் இல்லாவிடில் அவர் குற்றத்தைப் புறத்தே சென்று கூற வேண்டியதற்கு இடமேயில்லை. ஆதலின் புறங்கூறுதல் என்னும் தீமைக்கு சுயநலம் என்னும் பேய்க்குணம் ஆதாரமென்று விளங்கும்.

மஹாபாரதத்தில் பஞ்சவரில் கடைப்பிறந்தோனாகிய சகாதேவன் தர்மபுத்திரரைவிட உண்மையிலும் நீதியிலும் கல்வியிலும் சாஸ்திர ஞானத்திலும் சிறந்தவனென்பதாக மகா பாரதத்தினை நன்கு ஆராய்ந்தவர் செவ்விதின் உணர்வர்

அதுபற்றியே சத்துருவாகிய துரியோதன வேந்தன் தனக்கு ஜெயம் உண்டாகக்கூடியதான சுபமுகூர்த்தம் தேர்ந்துகூற இச்சகாதேவனிடம் தனிமையில் வந்து வெற்றியளிக்கும் நன்னாளைத் தெரிந்துணர்ந்து சென்றான் என்பது ஒன்றே தக்க சான்றாகும். அத்தகைய சுயநலப்பேயை வென்ற ஸத்தியதரிசனியாகிய சகாதேவனே மூண்ட பெரும்போரில் கௌரவர்களையும், நேருக்கு நேராக ஒளியாது வன் சொற்கூறி வாழ்நாள் முழுதும் துணைவனாயிருந்த கர்னனையும், கொல்வதாக சபதம் கூறாமல் எதிரில் நயம்படப்பேசி மறைவில் புறங்கூறிவஞ்சமிழைத்தலே வாழ்

க்கைப்பயனை மதித்த சகுனியைக் கொல்வதாக சங்கற்பம் செய்தனன் எனில் புறங்கூறுதல் என்னும் புன்மைக்குணம் எத்துணை யிழிந்ததென்பதை விரிக்கவேண்டியதில்லை. புறங்கூறுதல் என்னும் கொடியகுணத்தினால் விளையும் விபரீதமான தீங்குகளை யெண்ணியே நாலடியாரில "புறங்கூற்றில் மூகையாய் நிற்பானேல்யாதும் அறங்கூறவேண்டா அவர்க்கு" எனப் புறங்கூறும் விஷயத்தில் ஊமையாக விருப்பின் வேறு அறமே வேண்டுவதில்லை யென்றார். நாநலம் எல்லா நலத்திலும் மேம்பட்டதாக அறிஞர் அனைவரும் பாராட்டும் உண்மையறிந்தும், புறங்கூறுதலுக்குப் பயன் படும் நாவின் தன்மையை நோக்கிப்பேசும் திறமைபெறாத ஊமையாகலாம் என்று கூறவும் துணிந்தனர் எனின் நாம் எச்சரிக்கையாகப் பேசப்பயிற்சிபெறலே பெரும்பேறாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

ஸ்ரீ-ஷண்முகா பிரிண்டிங் வொர்க்ஸ், திருப்பாதிரிப்புலியூர்.

மறதி.

இம்மறதியெனும் ஒரு குணமானது மாந்தரின் அறிவாகிய சூரியனை மறைக்கும் இருண்ட மேகத்திற்குச் சமானமாகும். இது பெருமிதமென்னும் (இயற்கையாய) மந்த குணத்தினாலும் பெருஞ் செல்வம் பேரின்பம் என்னும் (செயற்கையாலாய) காரணம் பற்றி விளையும் பேருவகையாலும் தோன்றுவதாகும்.

முதற்கூறிய பெருமித குணமுடையாரும் தமது மறதியை மாற்ற ஒவ்வொரு தருணங்களிலும் உட்கொண்ட விஷயங்களைப் பன்முறையும் சிந்திக்கக் கவலையுடன் பழகிவரின் நாளடைவில் மறதி மறதியடையுமென்பதுறுதியே.

மந்தகுண முதிர்ச்சியுடைய கிளிகளும் பிறர் பயிற்றியவற்றை இடையறாது கூறும் சிறந்த நற்பழக்கத்தினால் மறவாது பேசும் தன்மை பெறுகின்றன.

மறதியையொழிக்கக்கவனமே மருந்தாகும். இம்மறதிக்குள்ளாகாமல் கூரிய மதிவன்மையுடையோராதல் நல்வினையின் பயனாகும்.

அம்மதிவன்மையுடையோர் சுதந்தரயூகங்கட்கும் அரிய பெரிய செய்கைகட்கும் அதிபராய் உலகில் எஞ்ஞான்றும் பிரகாசிப்பர்.

அஃதில்லாமல் மனவன்மை மட்டில் உடையோர் அவ்வாறு எற்றமடைதற்கியலாவிடினும் குற்றங்கடிதலென்னு மனப்பழக்கத்தினால் நாளடைவில் மறதியையகற்றி கற்றன கேட்டனவைகளை மனதிற்பதித்துக் கல்விமான்களாயும் குணவான்களாயும் சிறப்பர்.

இதனை "சித்திரமுங்கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொருகல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையுநடைப்பழக்கம் நட்புந்தயையும்
கொடையும் பிறவிக்குணம். என்ற அருள்வாக்கி

ஞுமறிக. இதனுல் சூக்கும ஆராய்ச்சிக்கேற்ற தீவிர மதி வன்மை யுடையோர் புதுச்சாதனங்களுக்குக் கர்த்தாவாவர் அமைதியான மதி வன்மையுடையோர் பழமையாயுள்ளவற்றை அழியாது பாதுகாப் பவராவர். ஆகவே இருதிறத்தினரும் இன்றியமையாதவரே.

இளமையில் பெறுங்கல்விச் செல்வத்தை ஓங்கவொட்டாமல் கெடுப்பது இம்மறதியே யென்னின் இக்குணம் மனிதரின் பின் னிட்ட எல்லா நன்மைக்கும் பெரும் சத்துருவென்று கூறவும் வேண்டுமோ? கற்றவைகளைப்போலவே கேட்டனவற்றையும் மன தில் நிலைக்கவொட்டாமலகற்றி மனிதரைத் தாழ்ந்த நிலைமைக்குக் கொண்டுவிடும் இதனை மாற்ற முயல்வதன்றோ முக்கிய கடமை யாகும். இதுபற்றியே

"பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்சநிரப்புக் கொன்றுங்கு", எனத்திருக்குறளாசிரியர்

அருளிச்செய்தனர்.

தரித்திரம் அறிவைக்கெடுப்பதுபோல மறதி புக ழைக்கெடுக்குமென்றனர்.

நீர்மையேயன்றி நிரம்பவெழுந்ததங்
கூர்மையுமெல்லா மொருங்கிழப்பர்—கூர்மையின்
முல்லையிலக்கு மெயிற்றுய் நிரப்பென்னும்
அல்லலடையப்பட்டார். என்றூர் நாலடியாரும். இதனு

லும் வறுமையறிவையழிக்கு மென்பது பெறப்படுகின்றது. அவ் வாறே மறதி புகழைக்கொல்லல் உறுதியாம். புகழ் கல்வி கேள்வி

களால் தெளிந்த மனத்தூய்மை நல்லொழுக்கம் இவற்றையுடையார் மாட்டே செழித்தோங்குவதென்பதும் அதனற் பெறப்படும்.

இனி இக்கல்வி கேள்விகளின் பயனை யழிக்கு மறதியை இயற்கையிலுடையார் சிலராக செயற்கையாய் செல்வம் இன்பம் இவற்ருல் அளவு கடந்தெழும் மகிழ்ச்சியினுற் போதரும் மறதிக்குள்ளாவோர் பலர், இத்தகைய செல்வச்சிறப்பாதிகளால் உண்டாம் செருக்கோடு கூடிய பெருமகிழ்ச்சியே இளமையில் தான் கற்றநீதிகளை அவமதித்து மறக்கச்செய்கின்றது.

தனதெளிய நிலைமையில் உதவி புரிந்தோர் எளிய நிலைமையடைந்து தன் உதவியை நாடுங்கால் கன்றிபாராட்ட வொட்டாமல் தடுக்கின்றது.

வறுமையுடையோர் நல்லோரெனினும் அவர் வருத்த நிலையை உணர வொட்டாமல் மறைக்கின்றது.

இஃதொன்ருே தன்னையீன்று உயிரினுமினிய உண்மையன்புடன் போற்றிவளர்க்கும் பெற்ருேர் பெரியோர் மனதும் துன்புறும் வண்ணம் ஒழுகச்செய்கின்றது.

கோபத்திலும் கொடிது மகிழ்வாலெய்தும் மறதியென்ருர் திருக்குறளாசிரியரும்

இதனை " இறந்த வெகுளியிற்றீதே
சிறந்த மகிழ்ச்சிற் சோர்வு,,

இதற்கு சந்திரகுல திலகனும் பாண்டவரின் தந்தையுமாகிய பாண்டுமன்னன் இந்தமனென்னும் முனிவரால் தனக்குற்ற சாபத்தையு மறந்து மத்திரையாகிய மனைவியைச்சேர்ந்து மரணமடைந்தான் எனும் மகா பாரதக்கதையினும் சிறந்த உதாரணமில்லை.

என்னே! உயிரைக்கொள்ளை கொண்ட கோபம் பிறரைக்

கெடுக்குமறதி தன்னையே கெடுக்கும் ஆதலின் கோபத்ினும் கொடிய குணம் மறதியே யென்றார் திருவள்ளுவரும்.

சூரியகுலத்தரசனாகிய துஷ்யந்தனுக்கு தான் காந்தர்வமாக கண்ணுவர் ஆசிரமத்தில் மணந்த பேரழகியருட் பேரழகியாகிய ஸகுந்தலையைப் பின்னர் இன்னாளென்றும் அறிய வொட்டாமல் மதியை மறைத்து அனாதரவு செய்து ஒதுக்கச்செய்து நிந்தைக்குள்ளாக்கியதும் இம்மறதியே யன்றோ.

இம்மறதி சாபத்தினால் விளைந்ததென்பர். ஒக்கும் சாபமளித்தவர்களும் மறதியுண்டாகக்கடவதென்பதை பெரியதண்டமாகக்கருதியே அக்கால் விதித்தனரென்பதுவே இம்மறதியினால் விளையக்கூடிய தீமைக்கு அளவு காண்பிப்பதாகும்.

உலக வாசனையெய்துவதற்கு முன்பு கெர்ப்பத்தில் சிசுத்தன்மையில் முந்திய ஜென்ம கர்மங்களை புணர்ந்து ஆத்மஞானம் பெற்று சுழுப்தியில் நிற்கும் நம்மனைவரையும் இம்மறதியெனும் திரைகொண்டே நம் இருவினைப்பயன்கள் மறைக்கின்றனவென வேதங்களும் கோஷிக்கின்றன. ஆகவே இம்மறதி ஆத்மாவை எந்த அவஸ்தையிலும் சோர்வின்றிச் சென்று பற்றி அடிமையாக்கும் திறமை மிகுதியுமுடையதே.

மறதிக்குணமில்லாதார் எவ்விஷயங்களிலும் பின்வாங்கார். அக்குணமுடையோர் எத்துணைப்பெருஞ் செல்வமுடைத்தாயிருப்பினும் அவற்றால் ஒரு பயனையும் அடையார் என்பது திண்ணம்.

மாணாக்கர்கள் ஆசிரியரின் கோபத்திற்குள்ளாகி அல்லல் படச்செய்வதும்,

பண்டிதரானோர் பகிரங்க சபைகளில் இகழ்ச்சிபெறக் காரணமாவதும்,

தனவந்தர்களை நாணயம் கெய்மாறு சிற்சில சமயங்களில் கனத்தைக்குறைப்பதும் இம்மறதியேயாம்.

தவிர மறதியை அஞ்ஞானத்தின் உருவகமாகப் பெரியோரும் இகழ்ந்தொதுக்கினர்.

மகிழ்ச்சியினுலெய்து மறதிக்கு இராமாயணத்தில் வானரேச ஞக்கப்பெற்ற சுக்ரீவன் தனக்கு அவ்வரசையளித்த இராமரது காரி யத்தினை முற்றிலும் அரசசெல்வத்தாலும் இன்பத்தினுலும் மறந் திருந்து இலட்சுமணரின் கோபத்தோடு கூடிய வரவறிந்து அச்சத் தால் நினைவுகூர்ந்து மன்னிப்புக்கோரினன் என்னும் உதாரணமே சாலும் இதுபோல் விரிக்கிற் பலவுளவாகும்.

ஆயின் இத்தகைய தீமைகளை விளைவிக்கும் குணத்தை இயற் கையில் கடவுள் உண்டாக்கியதற்குக் காரணத்தை விசாரித்தல் அவசியமமாகும்

நன்மையும் தீமையும் கலவாமலும் சுகமுந் துக்கமும் சேராம லும் எக்குணமும் எப்பொருளும் எவ்விஷயமும் சிருஷ்டியில் இல்லை. இது எக்கொள்கையினருக்கும் ஒக்கும் ஆனுல்நன்மைமிகுதி தருவதை நற்குணமெனவும் தீமை பெரிதும் விளைவிப்பதைத் தீய குணமெனவும் வகுத்தனரெனவே கொள்ளல் வேண்டும். இதன்படி நோக்குமிடத்து இம்மறதியிலும் ஒரு சிறு நன்மையுளதெனல் பெற ப்படல் நியதம். அஃதியாதோவெனில் தீயனவற்றை மறத்தலும் நல்லனவற்றை மறவாதிருத்தலும் நல்லோரொழுகும் நடையாதலின் அத்தகைய தீமைகளை மறக்கவேண்டியதற்கே மறதி யுதவி செய்கி ன்றது. இஃதொன்றினுல் மறதியும் ஓர் நற்குணமாக மதிக்கத்தக் கதே,

''நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல

தன்றேமறப்பது நன்று,, எனவும் உள்ள திருக் குறளாலுமறிக.

இவ்வாறே பேராசை ஒவ்வோர் சமயங்களில் மனத்திலெழுமாயின் அதனையும் மறக்கவேண்டும்

"கிட்டாதாயின் வெட்டென மற" என்ருர் ஔவைப்பிராட்டியாரும்

ஆகவே ஒவ்வொருவரும் மறதியினுலெய்தும் தீமைகளை நன்கு மதித்து மறதியை மறவாது மறக்க எல்லாச்சமயங்களிலும் முற்படவேண்டும் மறக்கத்தக்கனவற்றை மறக்கவும் வேண்டும்.

குறித்தகாலத்தில் காலங்காட்டும் கருவிக்கு இயங்கும் தூண்டுதலை அதாவது (சாவி கொடுத்தலை) மறதியால் சோர்வுபடின் உண்டாம் நஷ்டம் இத்தகையதென்பதை ஒவ்வொருவரும் நன்குணர்ந்துள்ளாராதலின் மனமாகிய கருவிக்கு அது கடமையாய் வொழுங்குகளில் வழுவாதிருக்கும் வண்ணம் கிளைப்பாகிய திறவுகோலால் ஊக்காதொழியின் அதனுலெய்தும் கேடுகளும், நஷ்டங்களும்இத்தகையதெனக் கூருமலே யுணர்வது கடனும்

இச்சை.

இஃது மெய், வாய், கண், மூக்கு, செவி, யாதிய ஐம்புலன்களின் விஷய நுகர்ச்சி வாயிலாய் மனதிடம் உதிக்கும் ஓர் வகைப் பற்றும். இப்பற்றுதலானது இவ்வுலகில் நம்மைக் கீழ்மைப்படுத்துவதற்கும் மேன்மைப்படுத்துவதற்கும் முக்கிய கருவியாம். ஒரு திறவுகோலானது எவ்வண்ணம் அதற்குரிய பூட்டைத் திறப்பதற்கும் பூட்டுவதற்கும் பயன்படுமோ அவ்வண்ணமே இப்பற்றும் அதனைச்செலுத்தும் கீழ் மேல் ஆகிய இடங்களின் தன்மைக்கேற்ப இருவிதமாயும் பயன்தாவல்லதாகின்றது. ஒருவன் தனது பற்றனைத்தும் பரதாரம் பரபொருள் கூடாவொழுக்கம் இவற்றில்

செல்லவிடுவானாயின், அதுவே இவனைக்கீழாக்கி மீளாநரகிற்காளாக்குகின்றது. அவ்வாறின்றி பெற்றோர் பெரியோர் குரு தெய்வம் இவர்பால் பற்றுவைப்பின் அதனால் நல்லுணர்வும் நல்லொழுக்கமும் எய்தி தெய்வபக்தியிற் சிறந்து முதிர்ந்து மெய்ஞ்ஞானமும் வாய்ந்து நற்கதி கிட்டும்.

ஆயின் இப்பற்றெனும் பொருளை மனத்தராசின்கண் அறிவெனும் துலைமுள் சிறிதும் பிறழாது எவ்வெப்பொருள்களினும் நிலைநிற்குமாறு நிறுத்துக்கொள்ளுவது அரிதினும் அரிதாம். அரிதினுமரிதென்பது கருதியே ஆன்றோர் பலரும்

"பற்றுக்கவல்லாரே பழவினை நீப்பார்" என்றும்
"அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும்
தவா அப்பிறப்பீனும் வித்து" என்றும்
"ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்

ஈசனோடாயினுமாசையறுமின்கள்" என்றும் ஓதுக்கியுள்ளார் எனினும்

பிறப்பிலேயே பற்றும் குணம் மாந்தரிடத்து இயற்கையால் கடவுளருளால் அமைந்ததேயன்றி செயற்கையால் போந்ததன்று,

அப்பற்றும் குணம் சிருஷ்டியில் அமையாவிடின் ஔவையார் அவர்கள் அறஞ்செயவிரும்பு எனவும்.

திருக்குறளாசிரியர்

"பற்றுக பற்றற்றான் பற்றினை" எனவும் அருளிச்செய்திரார்.

அழிதலுக்கிடமாகிய உலகவின்பங்களில் மிகுதியுமழுந்தி அறிவுகெட்டு மயங்கும் நிலைமையினை மாற்றி அறத்தில் ஆசையும் புண்ணிய விருப்பமும் பொருந்தி அப்பற்றினை முத்தியடைவிக்கும் முதல்வனிடம் செலுத்தல் அறிவுடையோர் கடனாம்.

பற்றற்றானைப் பற்றுதற்கும் இப்பற்றே காரணமாயிருத்தலி ஞனும்,

அறத்தைச்செய்தற்கும் அதன்பால் எழும் விருப்பமே காரண மாதலினனும், மாந்தர் உய்வழிகருதியே இப்பற்றுங் குணத்தினை இயற்கையிலமைத்தனர் எல்லாம் வல்ல கடவுள். அன்றியும் எவ்வெ வர்க்கும் பல்பிறவிகளினும் முயலப்பெறும் அறம் அருள் ஆகிய இர ண்டினது பயனுகவே மெய்ஞ்ஞானம் நிகழுமன்றி எளிதில் கிடை ப்பதன்றாம்.

"பல்லூழிகாலம் பயினறரனையர்ச்சிக்கில்
நல்லறிவு சற்றேநகும்" என்றார் ஔவையா

ரும் அத்தகைய புண்ணிய முதிர்ச்சி பெற்றுப் பாவம் தேய்வதற் கும் புண்ணியத்தில் பற்றும் பாவத்தில் வெறுப்பும் இன்றியமை யாத நற்சாதனங்களாகும்.

அன்றியும் அறிவுடையோர் உலகவின்பத்தை முன்னை வினை ப்படி அநுபவிக்க நேருங்காலும் விருப்பு வெறுப்பின்றி நுகர்வர். இதனலும் மறுமைக்கு இவ்வினை சஞ்சிதமாய் நில்லாமல் ஒழிந்து இறைவன் திருவடிக்காளாக வேண்டு மென்னும் ஓர்வகை அருளின் பப்பற்று உளதெனுமுண்மை உய்த்து நோக்குவோர்க்கு விளங்கும்.

இதுபற்றியே இவ்வுலகவின்பம் இருப்பு விலங்காகவும் அவ்வு லகவின்பம் பொன்விலங்காகவும் மதித்து சொரூபதியானத்தினை யுமறந்து துரிய வெளியில் சுத்த பிர்மமாய் இரண்டறக்கலக்கும் அதீத நிலைமைக்கே பற்றினை எப்பாலும் செல்லவிடாமை பொருந் துமன்றி சொரூப தியானமுடைய எத்தகையார்க்கும் பொருந்துவ தன்றாம்.

திருநாவுக்கரசு சுவாமிகளும் "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்

நள்ளேன் நினதடியாரோடல்லால், என்றருளிச் செய்த மையே சான்றாகும்.

நினதடியாரொடல்லால் நட்புக்கொள்ளேன் என்று தனக்குள்ள பக்தியினது பெரும்பற்றை விளக்கியது காண்க.

ஞானம் பக்தியினாலும் அப்பக்தி நல்லொழுக்கம் நற்குணம் இவைகளினாலும் உதிக்குமெனக் கண்ணன் கீதையிலும் அருளியுள்ளார்.

அதுபற்றி ஆன்றோர் விதித்தனவற்றைப்பற்றும் ஓர் குணமானது இம்மையிலிருந்து மறுமைகாறும் நம்மைப் படிப்படியாக உயர்த்தி எற்றமுறச்செய்யும் பக்தி, சிரத்தை, ஊக்கம், முயற்சி முதலிய எல்லாப்பழக்கங்களையும் மனதில் அசையவிடாமல் பதித்துப் பொருத்துவிக்கும் இருப்பாணியுமாகும்

இப்பற்றென்பதுலகில் உயிர்களிடத்தே ஒருங்கேயில்லையாயின் உபகாரச்சிறத்தையும் இன்றாகும்.

தாய் மைந்தரை யாதரியாள். கணவன் மனைவியைக் காவாதொவன். ஆசானை மாணாக்கர் நாடார், ஆலய வழிபாடும் அழிந்துபடும். நண்பினரும் இரார். பக்தரும் கைவிடப்படுவார். துன்புறும் ஒரு பிராணிகளு இயன்ற உதவி செய்யத்தவத்தரும் இரங்கார். இப்பற்றே நல்வழியிற் செலுத்தச்செலுத்த அன்பு எனவும், அதன் பின்னர் அருள் எனவும் முறையே மறுபெயர் பெறுவதாயும் கூறலாம்.

இல்லறத்திற்கு அன்புடைமையும், துறவறத்திற்கு அருளுடைமையும் பிரதான அங்கங்களாகும். அவ்வருள் எல்லா உயிர்களிடத்தும் இயல்பாயெழும் பெருங்கருணை யெனவும் படும்.

அக்கருணை யென்பதும் மேற்கூறியவண்ணம் ஓர் வகை உயர்நிலை நெகிழ்ச்சியேயன்றோ.

ஆதலின் நம்முன் ஒவ்வொரு கணத்தினும் மனதின் தூய்மையைக் கறைப்படுத்தவல்ல பற்று எனும் ஓர் குணத்தினைத் துணைக்கொண்டு எழுந்து மலைந்து போராடவல்ல விஷயங்கள் எண்ணவும் தொலையாதனவாகும். ஆதலின் அவைகளாற் கலங்காமல் தெளிவுடன்

எதிர்த்து நன்மைக்குரித்தான வற்றைப்பற்றி தீமைக்கிடந்தருவன வற்றையெல்லாம் வெறுத்து ஒதுக்குவதே நமது அருங் கடமையாம்.

இதனையே "நன்மைகடைப்பிடி" என்னும் மூதாட்டியாரின் திருவாக்கும் வலியுறுத்துவதாகும்

அவ்வாறு பற்றத்தகும் நன்மைகளையறிந்து அறிவாற்பற்றுதல் பெறுதற்கரிய மானிடராகிய நமக்கே சாத்தியமாகும் அத்தகைய பிறவியை நல்வினைவசத்திற் பெற்று அதனைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறநூல்களை நல்லொழுக்கமுடைய ஆன்றோரையடுத்துக் கேட்டுணர்ந்து சிந்தித்துத் தெளிவுடன் அவ்வாறேயியன்றவரையிலும் ஒழுகிப்பிறர்க்கும் உணர்த்தி உயர்நிலை யடைதலன்றோ வுறுதி.

தைலமும், வர்த்தியும், தகளியும் இருப்பினும், தீயில் வழி ஒளிசெய மாட்டாமைபோல மாந்தருக்கு நல்லோரிணக்கமும் நன்னூலறிவும் இல்லாவிடில் செல்வமும் அறிவும் மனமும் இருந்தும் பயன்றரமாட்டாததாகும்

"இருவிழிகள் வாண்முகத்திலிருந்தாலும் வானிரவி யெழுந்தாலன்றிக், கருதுநிலப்பல் பொருளுங்கண்ட லரிதாமுலகிற்கண் போலியார்க்கும், பெருகிய செல்வமும் அறிவும் பெற்றாலு நூலுணர்ச்சி பெறாரேயாகிற்றிருவளர் புண்ணியபாவம் இம்மை மறுமையும் வீடுந் தெரியாவன்றே" என்றமையானும் தெளியலாகும்.

நன்மை தீமைகளையுணர்ந்து, நன்மையில் விருப்பத்தைச்செலுத்தப்பயிலும் பயிற்சி இம்மை மறுமை இரண்டினையும் அளிக்கக் காரணமாயிருத்தலின் இச்சையை [illegible] தக்கமுறையில் செலுத்தி எல்லா நலமுமெய்துதல் எல்லோர்க்கும் இன்றியமையாததேயாகும்.

183874